IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No. 56/2024

Deposition of Witness for PW1.

Name : திரு. வறீதய்யா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.02.2026

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 21.02.2022 பிரதிவாதி பிரின்ஸ் எனது பெயருக்கு எழுதிகொடுத்த பிராமிசரி நோட் அசல் வா.சா.ஆ–1, 22.04.2024 தேதியிட்ட பிரதிவாதிக்கு நான் அனுப்பிவய வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.2, அதனை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை (தேதி இல்லை) வா.சா.ஆ.3, 06.12.2023 பிரதிவாதிக்கு சொத்தினை கிரையம் கொடுத்தவரின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–4, 15.12.2015 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–5, 26.09.2018 பிரதிவாதி மார்த்தாண்டம் சிட்டி யூனியன் வங்கி கிளையில் எழுதிக்கொடுத்த உரிமை ஆவணங்கள் வைப்பு அடமான ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா,ஆ,6. 15.05.2024 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா வா.சா.ஆ–7, வழக்கு பட்டிகை சொத்தை

பொறுத்த வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ–8. பிராது படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சொந்தஊர் முட்டம். பிரதிவாதி பிரின்ஸ் வாணியகுடி. நான் நிதி நிறுவனம் ( Finance தொழில் ) நடத்திவருகிறேன். அதற்குரிய உரிமம் எனது பெயரில் உள்ளது. கடந்த 2 1/2 ஆண்டுகளாக , அந்த நிதிநிறுவத்தை எனது மனைவி மற்றும் எனது மகன் நடத்தி வருகிறார்கள். அதற்கான ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியும். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில், அந்த நிதி நிறுவனத்தை நான் தான் நடத்தி வந்தேன். வட்டிக்கு பணம் கொடுப்போம், உரிமை ஆவணங்களை பெற்றுக்கொண்டு பணம் கடன் கொடுக்கப்படுவதும் உண்டு என்றால், சரிதான். எனது வீட்டிற்கு வந்து பிராமிசரி நோட்டை எழுதி கையொப்பம் செய்து தருவார்கள். பிராமிசரி நோட்டை நான் தயார் செய்து வைத்திருப்பது கிடையாது, அவர்கள் தட்டச்சு செய்து கொண்டுவருவார்கள். பிராமிசரி நோட்டில் சாட்சிகள் எனக்கு தெரிந்த ஒரு நபர் மற்றும் கடன் வாங்கிய பிரதிவாதிக்கு தெரிந்த ஒரு நபர் கையொப்பம் செய்தார்கள். அவ்வாறு என் தரப்பில் கையொப்பம் செய்த சாட்சி பெயர் எனக்கு நினைவில் இல்லை. பிரதிவாதி தரப்பில் ஒரு சாட்சி கையொப்பம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதன் பேரில், கையொப்பம் செய்த சாட்சியின் பெயர் எனக்கு நினைவில் இல்லை. நான் பிராமிசரி நோட்டினை 21.02.2022 அன்று எழுதி வாங்கினேன். பணத்தை அன்று நான் மொத்தமாக கொடுத்தேன். ரூ.4,50,000/– என்னிடம் எவ்வாறு இருந்தது என்றால், பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டபோது நான் நகையை அடகு வைத்து பணத்தை ஏற்பாடு செய்து

வைத்திருந்தேன். அவ்வாறு நகையை அடகு வைத்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். அவ்வாறு அடகு வைத்த தேதி எனக்கு நினைவில் இல்லை. அவ்வாறு நகைகளை நான் அடகு வைக்கவில்லை என்றாலும், பிரதிவாதிக்கு பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கு இரணியல் நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் இருக்கின்றன என்றால், என்னிடம் பணம் வாங்கி ஏமாற்றியவர்கள் மீது எல்லாம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரின்ஸ் மீது Eraniel FTC Court CC 18/2022 என்ற காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அது ரூ.35 லட்சத்திற்கான காசோலை மோசடி வழக்கு ஆகும். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது. இரணியல் நீதிமன்றத்தில் சுமார் 10 ற்கும் மேற்பட்ட காவேலை வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், 6, 7 வழக்குகள் இருக்கும். நான் 9ம் வகுப்பு படித்திருக்கிறேன். எனக்கு எழுத , படிக்க தெரியும். பொதுவாக காசோலை மற்றும் பிராமிசரி நோட்டினை கடன் வாங்குபவர் எழுதி தருவார், அவருக்கு எழுத படிக்க தெரியா விட்டால் வேறு ஒரு நபரை அழைத்து வந்து காசோலை அல்லது பிராமிசரி நோட்டினை எழுதித்தருவார்கள். பிரதிவாதி பிரின்ஸ்க்கு எழுத படிக்க தெரியாது என்றாலும், நான் அவரை கட்டாயப்படுத்தி பூர்த்தி செய்யாத பிராமிசரி நோட்டில் கையொப்பம் வாங்கி கொண்டேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் நான் பற்றுகை மனு நான் தாக்கல் செய்தேன். பிரதிவாதி மீது நான் முதலில் FTC நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்தேன். அதன் பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நான் காசோலை வாங்கும்போதே, உறுதி ஆவணங்கள் வேண்டும் என்பதற்காக, பூர்த்தி செய்யப்படாத பிராமிசரி நோட்டில் கையொப்பம் பெற்றுக்கொள்வது எனது வழக்கம் என்றால், சரியல்ல. நான் FTC நீதிமன்றத்தில் STC 24/23

ல் என்ற வழக்கில் பஸ்காலின் என்ற பெண்மணிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து , அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால், சரிதான் . அந்த பெண்மணியிடமும் பிராமிசரி நோட்டு வாங்கி பத்மநாபவுரம் சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு அ.வ.எண்.77/2023 பதிவு செய்துள்ளேன் என்றால், சரிதான். பின்னிட்டு சாட்சி பிராமிசரி நோட் அல்ல 100 ரூபாய்கான ஸ்டாம் பேப்பரில் எழுதி தந்தார். எனக்கு எதிராக District Crime Branch, Nagercoil ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். அந்த வழக்கில் நான் ஜாமீன் பெற்றுள்ளேன் என்றாலும், அதில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றாலும், சரிதான். அதில் போலி ஆவணம் தயாரித்து வீட்டினை கையகப்படுத்திவிட்டதாக என் மீது அவ்வாறு புகார் கொடுக்கப்பட்டது. அந்த வீடு தற்போது என் கைவசம் தான் உள்ளது. அந்த பஸ்காலின் எனது உடன் பிறந்த சகோதரி. அதுபோல, இந்த வழக்கிலும் பிரின்ஸ் யிடமிருந்தும் நிரப்ப படாத காசோலையும், அதற்கு ஆதரவாக எழுதப்படாத பிராமிசரி நோட்டையும் பெற்று, அவருடைய வீட்டை கையகப்படுத்த வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் நான் இந்த தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.